**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 17.11.2025**
**OS. No. 164/2023**
**வழக்கு சாட்சி PW.3–பழனிசாமி , த/பெ.ரத்தினம்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1) நான் முதல் விசாரணையில் சொன்ன விவரங்கள் எனக்கு நேரடியாகவே தெரியும். இந்த வழக்கு தாக்கல் செய்த விவரம் எவ்வாறு தெரியும் என்றால் நான் கூடவே இருப்பதால் எனக்கு தெரியும். பட்டா மற்றும் வரி ஆகியவை பூர்வீக உரிமையாளரான அறிவழகன் பெயரில் இருந்தது குறித்த விவரம் அந்த சொத்தை நான் கிரையம் பெற்று தரும்போது நில தரகராக இருந்ததால் தெரிந்து கொண்டேன். என்னுடைய வீட்டிற்கும், தாவா சொத்திற்கும் சுமார் 1 கி.மீ தொலைவு இருக்கும். வாதிக்கு இரண்டு பெண் பிள்ளைகள் உள்ளனர், ஒரு ஆண் பிள்ளை இருந்தது இறந்துவிட்டது. வாதி எத்தனை வருடங்களாக அவரது கணவரை பிரிந்து வாழ்ந்து வருகிறார் என்றால் சுமார் 30 வருடங்கள் இருக்கும்.

2) வாதி சுயமாக சம்பாதித்து தான் தாவா சொத்தை கிரையம் பெற்றுள்ளார். வாதி முதலில் கருவாடு வியாபாரம் செய்து வந்தார். வாதிக்கு தாவா சொத்து இல்லாமல் 10 சென்ட் நிலம் உள்ளது என்றால் சரிதான், அது அவரது தந்தை வழங்கிய சொத்தாகும். அந்த சொத்து மேச்சேரி டவுண்ட பஞ்சாயத்திற்குட்பட்டது என்றால் சரிதான். அது தற்போது வரை வாதியின் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி கிரையம் பெற்ற தேதியிலிருந்து தாவா சொத்தில் தான் குடியுள்ளார்கள் என்றால் சரிதான். தாவா சொத்து 1 ம் பிரதிவாதி தனிப்பட்ட முறையில் கிரையம் பெற்ற சொத்து என்றும், பெயரளவில் தான் வாதியின் பெயர் அந்த பத்திரத்தில் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதி தன் தனிப்பட்ட சம்பாத்தியம் மூலம் தான் அந்த சொத்தை கிரையம் பெற்றுள்ளார். வாதியின் ஆண் வாரிசு இறந்துவிட்ட படியால் அவருக்கு பாதுகாப்பாக இருக்கவேண்டும் என்று வாதியின் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது

என்றும் ஆனால் அதை தவறாக பயன்படுத்திக்கொண்டு வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் இன்றளவிலும் எந்த தொந்தரவும் செய்யவில்லை என்றும், நான் வாதிக்க ஆதரவாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.